# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் **15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 5859/SCIC/2024**

திரு அ. ராஜ் அம்ப்ரோஸ் புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ...... பொதுஅதிகார அமைப்பு
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
அலுவலகம்,
தலைமையிடம், காஞ்சிபுரம் 631 501

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 20.03.2024 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.04.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 09.12.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 20.03.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் திரும்பெரும்புதூர் காவல் நிலையத்தில் 07.11.2023 மற்றும் 08.02.2024 ஆகிய தேதிகளில் தன்னிடம் விசாரணை மேற்கொண்டபோது CCTVல் பதிவான பதிவுகள் என்பது போன்ற தகவல்களை 5 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு சரவணன், காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, காஞ்சிபுரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இவ்வழக்கானது முறைகேடான ஆவணப்பதிவு குறித்ததாகும். மேற்படி முறைகேடான ஆவணப்பதிவானது துணைப்பதிவுத்துறைத் தலைவரால் ரத்து செய்யப்பட்டதாகவும், அதனடிப்படையில் முறைகேடான பத்திரப்பதிவில் ஈடுபட்ட நபர்கள் மீது குற்றநடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்து, துணைப்பதிவுத்துறைத்தலைவரால் காஞ்சிபுரம் காவல் ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதுகுறித்து தான் தகவல்கள் கோரியுள்ளதாகவும், மனுதாரர் இன்றைய விசாரணையின்போது ஆணையத்தின் முன் எடுத்துரைத்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரரின் மனுவிற்கு 15.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவண நகல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இவ்வழக்கிற்கான முடிவு அறிக்கையும் (Closure Report) மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி தகவல்கள் மீண்டும் இன்றைய விசாரணையின்போதும் பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலரால் மனுதாரருக்கு ஆணையத்தின் முன் வழங்கப்பட்டது. எனவே, இவ்வழக்கில் பொதுத் தகவல் அலுவலரின் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு முகாந்திரம் இல்லையென்பதை ஆணையம் மனுதாரருக்கு எடுத்துரைக்கிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மனுதாரர் உரிய பொது அதிகார அமைப்பினை அணுகி நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் என்று ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது. **இத்துடன் இந்த புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5859/SCIC/2024</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
அலுவலகம்,
தலைமையிடம், காஞ்சிபுரம் 631 501

**மனுதாரர்**

**திரு அ. ராஜ் அம்ப்ரோஸ்,**
FR3 “A” **பிளாக், லேண்ட் மார்வல் அபார்ட்மெண்ட்,**
**எண்**.2, TNHB **சாலை, முல்லை நகர்,**
**தாம்பரம்** (**மே**), **சென்னை** 600 045

TK/PS